அப்புஆச்சி 'யாழன்' சண்முகலிங்கம் கிறித்தவ ஆண்டு 2004, தமிழ் ஆண்டு 2035
பொங்கும் பொங்கல் பொலியும் பொன்னாளில்
பொறுப் புடன் பொழிவேன் பொன்மொழி பொருள்பட:

தனிமனிதச் சுயமரியாதை பொலிந்து
குடும்பம் குமுகம் இனம் சிறந்து
பெருமையுடன் வாழத் தன்னாட்சி நாடில்லை
என்னாச்சு எ மது மூச்சு முடிஞ்சு போச்சா?
இல்லை! இல்லவே இல்லை! இன்றேல்
தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் விழா
பசிப் பொங்கலாக இல்லாது பேசிப் பாடி
உழவர் பெருநாளை உலகத் தமிழர் கொண்டாடி
தமிழுக்கே உரித்தான இறைவணக்கத்தை
உலகறியச் செய்யும் திருநாட்பொழுது
தமிழைப் பற்றியும் நினைவுகூரும் பணி
பட்டினத்தார், ஔவை, வள்ளுவர் வாக்கை
வழிகொண்டு விழிப்புணர்வை வகுப்போமாக:

"பேய்போற் றிருந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லா
நாய்போ லருந்தி நரிபோ லுழன்று நன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மை சொல்லிச்
சேய்போ லிருப்பர்கண்டீருண்மை ஞானந் தெளிந்தவரே." (பட்டினத்தார்)

"குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோடு இசைந்திலேன் நடுவேநின்ற
விலங்கலேன் விலங்கலா தொழிந்தேனல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈயமாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே." (அப்பர்)

"இட்டமுட னென்றலையி லின்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ - முட்ட முட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ . (ஔவை)

"தண்ணீர் நிலைநலத்தால் தக்கோர் கணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றால் கடல் ழ்ந்த வையகத்துள்
அற்புதமா மென்றே அறி." (நல்வழி 16)

"வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடி யிற்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது." (விபுலானந்த அடிகள்)

"சொலல் வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல் வெல்லல் யார்க்கு மரிது." (குறள் 647)

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந்
திண்மையுண் டாகப் பெறின்." (குறள் 54)

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான. (தொல்காப்பியம் பொருள் 206)

"சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததோரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையு நடைப்பழக்க நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்." (ஔவை தனிப்பாடல் 5)

ஆகவே உயிரைக் காக்க வேண்டிய மதங்கள்
உயிரைக் குடிக்கும் பிசாசுகளாக இருப்பது
கலியுகத்தின் கட்டளையல்ல கலியின் கூத்தல்ல
தமிழின் அருமை தெரியா அவல நிலை!

பட்டினத்தார் பாடியது போல் கையில் மருந்திருக்க
வெய்யில் மழை காற்றென்றும் பாராமல் அலைகிறோம்
மதசார்பற்ற இந்தப் பொன்னான பொங்கல் நாளில்
பதமான பொங்கல் போல் இதமான தமிழால் உயர்வோம்.

"சிற்றம் பலமுஞ் சிவனும் அருகிருக்க
வெற்றம் பலந் தேடி விட்டோமே! - நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பே மட நெஞ்சம்
கறந்திடத்தை நாடுதே கண்." (பட்டினத்தார்)

"வாழ்க! வாழ்க! வையம் வாழ்க ! என்றே - நாங்கள்
வணங்கினோமே அம்மாவுடன் நின்றே!
வாழ்க தமிழ்! வாழ்க இன்பம்! என்றே - ஓங்க
வாழ்த்தி உண்டோம் உறவுடனே ஒன்றாய்!" (பெருங்கவிக்கோ 1964 பொங்கலுக்காக)